

சென்னையில் மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்கு மீன்பிடி குறைவு காலங்களில் நிவாரணத் தொகையை நேற்று முன்தினம் (01.11.2023) வழங்கினார். உடன் மீன்வளம் – மீனவர் நலத்துறை ஆணையர் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர் செயலர் டாக்டர். கே.சு.பழனிசாமி ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

# டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, நவ. 3 - தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 31.10.2023 அன்று நடைபெற்றது,

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங்., தலைமைப் பொறியாளர் (வே. பொ.) ஆர்.முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி கீழ்க்கண்டவாறு டெல்டா விவசாயிகளுக்கு சம்பா சாகுபடிக்கான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்பு மழை பொழிவு பெறப்படின், குறுகிய கால நெற்பயிர் இரகங்களான ஆடுதுறை 45, 53, 56, 57, கோ 51. அம்பை 16 போன்ற இரகங்களை நேரடி விதைப்பு முறையில் பயிரிடலாம். பருவமழை பொய்த்தால், குறுகியகாலப் பயிர்களான பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறுதானியங்களை, மார்கழிப் பின் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

தற்போது, நடவு செய்யப்பட்ட சம்பா பயிர்களில் வறட்சி ஏற்படும் பட்சத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மையை ஏற்படுத்தும். பிங்க் பிக்மெண்ட்டட் ஃபேக்கல் டேடிவ் மெத்தைலோட்ரோஃப் என்ற உயிரினக் காரணியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நிலத்தடி நீரை (கிணறுகள், உறைக் கிணறுகள், ஆழ்துளை குழாய்க் கிணறுகள்) தேவைக்கேற்றவாறு, சிக்கனமாக விவசாயிகள் பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சம்பா பருவத்தில் பயிர் காப்பீடு செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் 15.11.2023 க்குள் பயிர் காப்பீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் முனைப்புடன் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!



உதகை, நவ. 3 - 1.1.2024ஐ தகுதியேற்படுத்திடும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியலில் 9.12.2023 சனிக்கிழமை வரை திருத்தங்கள் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியலை 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து நீலகிரி மாவட்டக் கழக அலுவலகத்திற்கு வழங்கியுள்ளனர். அதனை அனைத்து நகரஒன்றிய கழக செயலாளர்களுக்கும் நகரஒன்றிய கழகங்கள் வாரியாகப் பிரித்து வழங்கப்பட்டுஉள்ளது.

வாக்காளர் பட்டியலைப் பெற்றுக்கொண்ட நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் உடனடியாக தங்களது பகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பாகம் வாரியாக அந்தந்த வார்டுகிளைக் கழக செயலாளர்களிடம் ஒப்படைத்தும், விரைந்து செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன்.

வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியில் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து எவ்வித சுணக்கமுமின்றி முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று தலைமை கழகத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அன்புக் கட்டளையை ஏற்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் இன்றியமையாப் பணியில் விரைந்து ஈடுபட வேண்டும்.

புதிய வாக்காளர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் எதிர்வரும் நவம்பர் 4, 5 (சனி, ஞாயிறு) மற்றும் நவம்பர் 18, 19 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்டகளில் அந்தந்த வாக்குசாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு முகாம்களில் அனைத்து பாக நிலை முகவர்கள் BLA2 அனைவரும் தவறாது கலந்துக் கொள்ள கேட்டுக்கொள்வதோடு,

புதிய வாக்காளர் சேர்ப்பின்போது (17வயது நடப்பிலுள்ளவர்களும்) படிவம்6 பூர்த்தி செய்து உரிய ஆதாரங்களை இணைத்து வழங்கிட வேண்டும்.

இறந்த அல்லது இடம் பெயர்ந்த வாக்காளர்கள் நீக்காமல் தொடர்ந்து இடம் பெற்றிருந்தால் உரிய ஆதாரங்களை இணைத்து படிவம்7ல் பூர்த்தி செய்து வாக்காளர் இறந்திருந்தால் இறப்புச் சான்றிதழை அந்தந்த குடும்பத்தினரிடம் இருந்து பெற்று அவர்களது ஒப்புதல் கடிதத்தை இணைத்து வழங்கிடவேண்டும்.

மேலும் வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் பிழை, திருத்தங்கள், முகவரி மாற்றம் ஏதாவது இருந்தால் படிவம்8, படிவம்8ஏ ஆகிய படிவங்களை பூர்த்திசெய்து வழங்கிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலை சரிபார்த்த பின்பு பூர்த்தி செய்துள்ள படிவம்6, படிவம்7, படிவம்8, படிவம்8ஏ ஆகிய படிவங்களுடன் உரிய சான்றிதழ் ஆதாரங்களை அந்தந்த வாக்குசாவடி நிலை அலுவலரிடம் சிறப்புமுகாம்கள் நடைபெறும் நாட்களில் கழகத்தினர் வழங்கிட வேண்டும் என்றும் வேண்டுவதோடு,

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் அனைத்து கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நம் கழக ஆதரவு புதிய வாக்காளர்களை சேர்க்கும் இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் முனைப்புடன் செயலாற்றிட வேண்டுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் 4,5 மற்றும் 18,19 ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர் சரிபார்த்தல் பணிகள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் பா.முபாரக் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில்

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!



தருமபுரி, நவ. 3 - 1.1.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. 27.10.2023 முதல் 9.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர 04.11.2023, 05.11.2023, 18.11.2023 மற்றும் 19.11.2023 ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023 2 பெயர்களை சேர்க்க/ நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை 3 சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04.05112023 18,19112023 4 இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 01.01.2024 தேர்தல் ஆணையத்தால் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், கழகத் தலைவர் - தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், BLA2 நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிறப்பாக செயலாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவ்வப்போது மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

மேலும் ஒன்றிய வாரியாக பின்வரும் வாக்குசாவடி பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியம் ஒன்றியக் கழகச் செயலாளர் எ.எஸ்.சண்முகம், பொறுப்பாளர்கள் பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி துரைசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எல்.டி.பழனிசாமி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.எஸ்.கலைச்செல்வன். நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.வைகுந்தம், பொறுப்பாளர்கள், மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜகோபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் இரவி, நல்லம்பள்ளி மத்திய ஒன்றியச் செயலாளர் கே.பி.மல்லமுத்து, பொறுப்பாளர்கள் பொதுக்குழு உறுப்பினர் வி.நடராஜ், மாவட்ட துணை செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.ஜி.செல்வம், தருமபுரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.சேட்டு, பொறுப்பாளர்கள் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.உதயசூரியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.முத்தமிழன், ஒன்றிய பொருளாளர் தண்டபாணி, முன்னாள் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் டி.லட்சுமணன், தருமபுரி நகரச் செயலாளர் நாட்டான் என்.மாது, பொறுப்பாளர்கள் மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகா தேவி, முன்னாள் நகர பொறுப்பாளர் மே.அன்பழகன், நகர துணைச் செயலாளர் முல்லைவேந்தன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் எம்.எ.காசிநாதன், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் எஸ்.ரஹீம் பென்னாகரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் மடம்.க.முருகேசன், பொறுப்பாளர்கள் மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் வானவில் சண்முகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.கார்த்திக், ஒன்றிய அவைத்தலைவர் முருகன், பென்னாகரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சபரிநாதன், பொறுப்பாளர்கள் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ், இராஜி, மாதேஷ், கருணாநிதி, பொன். மகேஸ்வரன், கே.ஆர்.சி.செல்வராஜ், கே.அன்பரசு, என்.செல்வராஜ், வேலுமணி, சோலைமணி, பி.கே.துரைசாமி, சம்பத், வீரமணி, பூவண்ணன், பி.சி.அன்பழகன், சண்முகம், உமாசங்கர், வீரமணி ஆகியோர் தங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அவ்வப்போது மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

### பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 5ஆம் தேதிக்குள் 35,941 நியாய விலைக் கடைகளிலும்

# அரிசி உட்பட இதர பொது விநியோகத் திட்ட பொருட்கள் இருப்பு வைத்திட வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி அறிவுரை!

சென்னை, நவ.3- முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 31.10.2023 அன்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால் தலைமையிலான துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தின் தொடக்கத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து தலைமையுரையாற்றிய அமைச்சர், வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரிசி உட்பட அனைத்து பொது விநியோகத் திட்ட பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட ஏதுவாக தீபாவளி வரை அனைத்து நாட்களிலும் நியாய விலைக்கடை கள் திறக்கப் பட்டு பொருட்கள் விநியோகம் செய்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான நகர்வு பணிகள் அனைத்தும் நவம்பர் 5ம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து தற்போது வடகிழக்கு பருவ மழைக்காலம் தொடங்கி உள்ளதால் பொருட்கள் இருப்பு வைக்க பயன்படுத்தக் கூடிய அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் மழைநீர் கசிவு ஆகியவற்றால் பொருட்கள் சேதமாவது முற்றிலும் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். கொள்முதல் செய்யப்படும் நெல்லும் மழையினால் நனைந்து சேதமடையாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் துறைவாரி யான ஆய்வின்பொழுது, உணவுப் பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயலாற்றி, சேமிப்பு கிடங்கு கட்டுமான பணிகளில் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்ட இனங்களின் பணிகள் துரிதப்படுத்தப் படுதல் வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் பயன்பாட்டிலுள்ள நியாய விலைக் கடைகள் வன விலங்குகள் மூலம் தாக்கப்படுவதை தடுக்க முன் கதவுகளுக்கு இரட்டை அடுக்கு பாதுகாப்பு அமைத்திட பரிசீலித்திட வேண்டும் என்றும் இரண்டாயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளை துரித அடிப்படையில் உடனடியாக பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும் அரிசி கடத்தல் தடுப்பு நடவடிக்கையினைத் தீவிரப்படுத்து தல் வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் துறைத் தலைவர்கள் தங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர். ஆய்வுக் கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சகாய் மீனா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிச்சாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையின் காவல் தலைவர் கே.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



செஞ்சி, நவ. 3- வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்தலுக்கான சிறப்பு முகாமை தி.மு.க. வினர் மேற்கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கையில் தெரிவிக்கையில், வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்தலுக்கான சிறப்பு முகாம் வரும் 4.11.2023, 5.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெறும் என தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தல் மற்றும் நீக்குதல், தொடர்பான சிறப்பு முகாம் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

எனவே மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு செஞ்சி மஸ்தான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!



புதுக்கோட்டை, நவ. 3 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, வருகின்ற 1.1.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 04.11.2023, 05.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடி பெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்ப படிவமான படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023, பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11.2023, 18, 19.11.2023.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 05.01.2024 மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.


குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கே.கே.செல்லப்பாண்டியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வளவனூர் எ. கிருஷ்ணமூர்த்தி

### நவம்பர் 3 (2012)



இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமது பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

விழுப்புரம் வட்டக் கழகச் செயலாளராகவும் – பல ஆண்டுகள் வளவனூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொப்போர் தியாகியான இவர், 1953–ல் மும்முனைப் போராட்டம் முதல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஏறக்குறைய 368 நாட்கள் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**